# நாவலர்
# பன்முக நோக்கு

ஆய்வரங்க கட்டுரைத்தொகுப்பு –2017

மெய்ப்பொருள்
காண்பதறிவு


**கொழும்புத் தமிழ்ச்சங்கம்**

**தமிழியியல் ஆய்வுமையம்**

**2017**

தலைப்பு : நாவலர் பன்முக நோக்கு
(ஆய்வரங்க கட்டுரைத்தொகுப்பு -2017)

பதிப்பு : 2017

வெளியீடு : கொழும்புத் தமிழ்ச் சங்கம்
07, சங்கம் ஒழுங்கை, கொழும்பு - 06, இலங்கை

Tel: 0112 363759 Fax: 0112 361 381
E-mail: tamilsangamcolombo@yahoo.com
tamilsangamcolombo@outlook.com
Web: www. colombotamilsangam.com

# 3. நாவலரும் தமிழிலக்கணமும்; மரபும் மாற்றமும்

தி.செல்வமனோகரன்

காலனித்துவ ஆட்சிக்குட்பட்ட நாடுகளின் வரலாற்றில் 19ஆம் நூற்றாண்டு முக்கியமானதாகும். குறிப்பாக ஈழத்தில் சுதேச கலை, பண்பாட்டம்சங்களைப் பேணல், அரசியற் செயற்பாடுகளை முன்னெடுக்கக்கூடிய நிலை, ஆங்கிலக் கல்வி, தொடர்பாடல், பெருந் தோட்டப் பயிர்ச்செய்கை உள்ளிட்ட பொருளாதார நடவடிக்கைகள் அசைவியக்கத்தில் பெரும் மாற்றங்களை உருவாக்கின. இவற்றின் வழி படித்த மத்தியதர உருவாக்கம், அரச உத்தியோகம், ஆங்கிலவழி பெற்ற புதிய கலை இலக்கிய பண்பாட்டம்சங்களின் தாக்கங்கள் என்பன உருவாகின.

இவை சமயம், மொழி, கலை, இலக்கியம், அரசியல், பொருளாதாரம், அறிவியல் என்ற பல தளங்களில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தின. தமது சமயத்தைப் பரப்புவதற்கு மிஷனரிகள் பல்வேறு உத்திகளைக் கையாண்டு மக்களிடையே செல்வாக்குச் செலுத்த முற்பட்டன. மிஷனரிகளால் மதமாற்றம் ஆங்கிலக் கல்வி, அரச உத்தியோகம், பொருளாதார உயர்வு, அரச செல்வாக்கு போன்றன ஏற்படுத்தப்பட்டன. சாதாரண மக்களுக்கான கல்லூரிகள், ஆசிரிய கலாசாலைகள் உருவாக்கப்பட்டன. தங்கிக் கற்க வசதி, தொழிற்பயிற்சி என்பன வழங்கப்பட்டன. இவற்றை எல்லாம் மதம் மாறியும் மாறாமலும் பெற்றுக்கொண்ட சுதேசிகளின் செயற்பாடுகளே பிற்பட சுதேச எழுச்சிக்கு வித்திட்டன.

இத்தகைய சூழலில் தான் நாவலரின் வருகையும் இடம்பெறுகிறது. ஆங்கில வழிபெற்ற அறிவு, சுதேச ஈடுபாடு என்பன தன் வாழ்நாள் முழுவதையும் சைவத் தமிழ் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புச் செய்யத் தூண்டின. இதன் விளைவாக நாவலர் பிரசங்கம், அச்சுப்பதிப்பு, புதிய கல்லூரிகளை நிறுவுதல், பாடநூல்களை எழுதுதல், பழைய இலக்கண இலக்கிய நூல்களைப் பதிப்பித்தல், புதியன ஆக்குதல்

உள்ளிட்ட பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்தார். மொழிவழி சமயத்தையும் கல்வியையும் அவற்றின் வழி மொழியையும் வளர்ப்பதற்காக சில முயற்சிகளை மேற்கொண்டார். இவை எல்லா வற்றுக்கும் அடிப்படையாகவும் இன அடையாளத்தைப்பேணவும் இலக்கண அறிவை மேம்படுத்த முனைந்தார். நாவலருடைய இலக்கணக் கொள்கை என்பது சைவத்தையும் தமிழையும் வாழவைக்கும் நோக்கத்தை உடையதாகும். அவர் இளையவர்க்கு எண்ணும் எழுத்தும் அறிவிக்க விரும்பினார்.

> "பாதிரிமாருடைய தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலே படிப்பிக்கின்ற உபாத்தியாயர்கள் தமிழை நன்றாகக் கற்றுக் கொண்டவர் களல்லர்; ..... அங்கே படிப்பிக்கப்படும் புத்தகங்களிற் பெரும் பாலானவை சுத்தத்தமிழ் நடையின்றி இலக்கணப் பிழை களினால் நிறைந்தவைகளும், சைவ தூஷணங்களினாற் பொதிந்தவைகளுமாய் உள்ளவைகள், அங்கே படித்தவர்கள் திருத்தமாகிய கல்வியில்லாதவர்களும் ஒரு சமயத்தினும் பற்றில்லாத நிரீச்சுரவாதிகளுமாகிறார்கள். அவர்கள் பேசுந் தமிழோ அன்னிய பாஷை நடையோடு கலந்த அசுத்தத் தமிழ்"[1].

> "சைவசமயிகளே.. உங்கள் சமயகுருமாருக்குள்ளே சிலரொழிய மற்றவர்கள் அந்தியேட்டிப் பட்டோலை தானும் இன்னுஞ் சொல்லின் அந்தியேட்டி என்னும் பெயர்தானும் பிழையற எழுத அறியார்களே'[2]

மேற்படி இரு கூற்றுக்களின் வழி அக்கால ஈழத்தமிழர்களின் மொழியறிவு சார்ந்த பின்னடைவைப் புரிந்து கொள்ளமுடியும். இதனைப் பின்வருமாறு பிரித்தாராயலாம்.

1. பாதிரிமாரின் கல்லூரி ஆசிரியர்களுக்குத் தமிழறிவு போதாது
2. அவர்கள் அச்சிட்ட புத்தகங்கள் இலக்கணப் பிழைகள் நிறைந்தவையாகவும் சுத்தத் தமிழ் நடையின்றி இருந்தவையாயும் உள்ளன.
3. அன்னிய பாஷை நடையோடு கலந்த அசுத்தத் தமிழைப் பேசுதல்
4. சைவசமய குருமார்க்கு பிழையற எழுதத் தெரியாது

ஆகவே ஈழத்தமிழர்களில் பலர் அந்நிய மோகத்துக்கு ஆட்பட்டு தமிழ்ப்பற்றை கைவிட்டிருந்துள்ளனர் என்பது புலனாகிறது. மிஷனரிப் பாடசாலைகள் மதம் பரப்புதலையே நோக்காகக் கொண்டிருந்தமையாலும் விதேசிகள் தமிழைக் கற்றுத் தமிழருக்கு தமிழ்வழி கற்பிக்க முற்பட்டமையாலும் நூல்களை அச்சிட்டமையாலும் தமிழ்மொழி தன்னடை கெட்டு ஆங்கில நடையையொத்தமைந்தது; அச்சுப் பதிப்பில் பிழைகளும் மலிந்திருந்தன. இவற்றில் இருந்து தமிழையும் தமிழரையும் மீட்டெடுக்கவும் சைவத்தைப் பரப்பவும் நாவலர் கையிலெடுத்துக்கொண்ட ஆயுதமே இலக்கண முயற்சிகள் ஆகும். மரபுணர்வு மிகுந்தவரான ஆறுமுகநாவலர் இலக்கணம் சார்ந்து செய்த பணிகளை மூன்று தளங்களில் ஆராயலாம்.

1. இலக்கண நூல்களைப் பதிப்பித்தமை
2. இலக்கண நூல்களுக்கு உரையெழுதியமை
3. புதிய இலக்கண நூல்களை உரைநடையில் எழுதியமை

சிவஞான முனிவரால் நன்னூலுக்குச் செய்யப்பட்ட விருத்தியுரை, இலக்கண விளக்கச் சூறாவளி, தொல்காப்பிய சூத்திரவிருத்தி, சுவாமிநாத தேசிகரின் இலக்கணக்கொத்து மூலமும் உரையும் என்பவற்றை இவரே பரிசோதித்தப் பதிப்பித்தார். சி.வை. தாமோதரம்பிள்ளையின் வேண்டு கோளுக்கிணங்க தொல்காப்பிய சொல்லதிகாரம் சேனாவரையரைத்தையும் சதாசிவம்பிள்ளைக்கு பிரயோக விவேகம் மூலமும் உரையும் பரிசோதித்து கொடுத்ததன் மூலம் அவற்றைப் பதிப்பிக்க உதவினார். இங்கு முதன்மையுறும் விடயம் பல ஏடுகளைக் கொண்டு இந்நூல்களைப் பரிசோதித்து - உண்மையைக் கண்டறிந்து பிழையறப் பதிப்பித்தமையாகும். இவருக்கு முன்பு சிலர் பதிப்பிலீடுபட்ட காலத்தும் அவர்கள் தமக்குக் கிடைத்த ஏடுகளைப் பதிப்பித்தனரே ஒழிய பல ஏடுகளைத் தேடிக் கண்டடைந்து பரிசோதித்துப் பிழையற பதிப்பித்தனரல்லர். அதனாலேயே நாவலரின் பதிப்புக்கள் செம்பதிப்புக்கள் எனப்படுகின்றன. அத்தோடு தான் பதிப்பிக்கவென தமிழ் இலக்கண நூல்களின் நீண்டதொரு பட்டியலை அவர் வைத்திருந்தார் என்பதையும் அறியமுடிகிறது.

இவ்வாறான இலக்கணப் பதிப்புக்களில் நாவலர் நவீன உக்திகளைக் கையாண்டு கற்பவர் இலகுவில் புரிந்துகொள்ளத்தக்க வழிகளை ஏற்படுத்தியுள்ளார். உதாரணமாக அவரது பதிப்பில் பின்வரும் பண்புகளைக் காணலாம்.

1. சந்திபிரித்துப் பதிப்பித்தமை
2. நிறுத்தற் குறிப் பயன்பாடு
3. பந்தி பிரித்துக் காட்டுதல்

நன்னூல் விருத்தியுரை முதற்பதிப்பில் இவை பெரிதும் காணப்படாத விடத்தும் இதன் இரண்டாம் பதிப்பிலும் மிகுதி நூற்களின் பதிப்புக்களிலும் இவற்றை முழுமையாகப் பதிப்பித்துள்ளார்.

> "நாவலர் அச்சிட்ட நூல்களைப் பார்த்த பின்னரே பலரும் சந்திபிரித்துத் தமது நூல்களை அச்சிடலாயினர்"[3]

என ஜம்புலிங்கம்பிள்ளை தெரிவித்திருப்பது சுட்டத்தக்கது. அத்தோடு இவரது பதிப்புக்களில் இலக்கணப் பிழைகளோ எழுத்துப் பிழைகளோ பாடபேதங்களோ இருந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நாவலரின் அடுத்த இலக்கணப் பணியாக அமைவது உரை செய்தலாகும். அவருடைய நன்னூற் காண்டிகையுரை பிரபல்யமானது. அவர் அவ்வுரையை 'திருத்தியும் விளக்கியும், சுட்டியும் புதுக்கியது' எனச் சுட்டப்பட்டுள்ளது. விசாகப்பெருமாளையர் செய்த முக்காண்டிகையோடு வினாவிடை எனும் இரண்டையும் இணைத்து ஐங்காண்டிகையுரை செய்தார் எனச் சில ஆய்வாளர்கள் உரைக் கின்றனர்[4]. அதேவேளை,

> 'வழக்கிலிருந்த உரைகளில் மாணவர்களுக்கு விளங்க வேண்டுவனவற்றை மேலும் விளக்கியும், அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய குறிப்புக்கள் பல கூட்டியும் பகுபதமுடிவு சில காட்டியும் சொல்லிலக்கண சூசி சேர்த்தும் இன்றியமையாத அப்பியாசங்களைத் தொகுத்தும் நாவலர் புதிய முறையில் நன்னூலுக்கு காண்டிகையுரையினை எழுதினார்'[5].

எனும் கூற்று கவனத்துக்குரியது. இவ்வுரையின் சிறப்புக்களாகப் பின்வருவனவற்றைப் பட்டியற்படுத்தலாம்.

1. சூத்திரங்களுக்கு இடையிலான பரீட்சை வினாக்களை அமைத்துள்ளமை
2. நூலின் முடிவில் அப்பியாசங்களை இணைத்துள்ளமை
3. சொல்லிலக்கண சூசியை இணைத்துள்ளமை
4. உபாத்தியாயர், மாணாக்கர் என்போருக்கான அறிவித்தல்களில் இலக்கணம் கற்குமுறை பற்றி கூறியுள்ளமை
5. உதாரணங்களையும் தேவைக்கேற்ப விளக்கியுரைத்துள்ளமை.

இவற்றினூடாக மாணவர்க்கான இலக்கணக் கல்வியை மனதிற் கொண்டே இவ்வாறு நன்னூற் காண்டியுரையைத் திருத்தியும் விளக்கியும் கூட்டியும் புதிக்கியும் எழுதிப் பதிப்பித்துள்ளார் என்பது தெற்றெனப் புலப்படுகிறது.

அவரெழுதிய இலக்கணம் புத்தாக்கங்களாக இலக்கணச் சுருக்கமும் இலக்கண வினாவிடையும் திகழ்கின்றன. நாவலருக்கு முன்னைய வசன நூல்களின் நிலையை மயிலை.சீனி.வேங்கடசாமி பின்வருமாறு கூறுகிறார்.

> "தமிழ் மொழியைப் படிக்கத் தொடங்கிய ஆங்கிலேயர்களுக்குத் தமிழ் இலக்கணங்கள் எளிதில் விளங்கவில்லை….. சூத்திரங் களைப் படித்து அவற்றிற்குப் பொருள் தெரிந்துகொண்டு பின்னர் இலக்கணத்தை அறிந்து கொள்வது கடினமாக இருந்தது"[6]

அதனால் அக்கால ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பனி அரசு தமிழ் மொழி இலக்கணத்தை வசன நூல்களில் எழுதுமாறும் அதற்கு ஒரு தொகைப் பணம் தருவதாகவும் அறிவித்தது. அதன்வழி பணத்துக்காக உருவான தமிழ் இலக்கணநூல்கள் பற்பல பிழைகளை உடையனவாய் அமைந்திருந்தன.

நாவலரோ சைவமும் தமிழும் எழுச்சி பெற தன்தாய்மொழி செழுமையுற வேண்டும் என்ற எண்ணத்தோடு இளந்தலைமுறை கசடற இலக்கணங் கற்று இலக்கியத்தைப் புரிந்துகொள்ளவே தன்னூல்களை ஆக்கினார். அவை பிழையற்றவையாகவும் செம்பதிப் பாகவும் அமைந்திருந்தன. இலக்கண வினாவிடை இலக்கணம் கற்கப்புகும் மாணவரை மனதிற் கொண்டே ஆக்கப்பட்டுள்ளது.

சைவவினாவிடை போல இலக்கண வினாவிடை சிறிய வினாக்களும் விடைகளுமாக அமைந்துள்ளது. இவ்வினாவிடை அமைப்புமுறையை நாவலர் கிறிஸ்தவ பாதிரிமார்களிடமிருந்து பெற்றிருக்கலாம் எனச் சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அதேவேளை தொல்காப்பிய உரையாசிரியர்கள் வினா எழுப்பி விடையளிக்கும் முறையைப் பண்டுதொட்டே செய்து வந்துள்ளனர் என்பது கவனிக்கத்தக்கது. மாணவர்க்குரிய விடயங்களை மட்டுமே நாவலர் எடுத்துரைத்தார் என்பதும் தேவையற்ற விளக்க விரிவுரைகளோ, கடினமாக இலக்கண நுட்பங்களையோ அவர் எடுத்தாளவில்லை என்பதும் கவனத்தைப் பெறும் விடயங்களாகும். இந்நூல்,

1. எழுத்ததிகாரம்
2. சொல்லதிகாரம்
3. தொடர்மொழியதிகாரம்

எனும் மூன்றதிகாரங்களைக் கொண்டமைந்துள்ளது. எழுத்ததி காரத்தினுள் எழுத்தியல், பதவியல், புணரியல் என்பனவும் சொல்லதிகாரத்தினுள் பெயரியல், வினையியல், இடையியல், உரியியல் என்பதையும் தொடர்மொழியதிகாரத்தினுள் தொகைநிலைத் தொடரியல், தொகாநிலைத் தொடரியல், ஒழிபியல் என்பனவும் கொண்டமைந்துள்ளன. 172 வினாக்களும் விடைகளும் கொண்டதாக இந்நூல் திகழ்கிறது.

இன்றைய நவீன கல்வியியலாளர்கள் வயதுக்கேற்பப் பாடத் திட்டங்களை வகுக்கவேண்டும் என்பதை திட்டவட்டமாக கூறி வருகின்றனர்; கல்வித் திட்டங்களும் 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து அதற்கேற்பவே மாறிமாறி வடிவமைக்கப்பட்டு வருகிறது. தமிழ்மொழியின் பாடத்திட்டமும் அவ்வாறே. மொழியியற் சிந்தனை மேம்பட்டுள்ள இன்றைய சூழலில் வயதுக்கேற்ப இலக்கிய இலக்கணங்களை பாடவிதானத்துள் உள்ளடக்கி வருகின்றனர். குறிப்பாக இன்றைய தமிழ் பாடநூல்களில் இடம்பெறும் மொழியியல் நோக்குடைய இலக்கண இணைப்புக்கள் தொடர்பாக பல்வேறு சர்ச்சைகள் இன்றும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. ஆனால் நாவலர் தன் நூலில் தெளிவுற இதனைக் கடைப்பிடித்துள்ளார். உதாரணமாக இலக்கண வினாவிடையில் 'ஏகார இடைச்சொல்

எத்தனை பொருளைத் தரும்'? எனும் வினாவை எழுப்பி 'ஏகாரம் இரண்டு பொருளைத் தரும்' என விடைபகர்ந்து அவை தோற்றம், பிரிநிலை எனக் கூறி உதாரணங்களும் தருகின்றார். இதையே இலக்கணச்சுருக்கத்தில் ஏகாரத்துக்கு ஏழு பொருள் எனக் குறிப்பிடுகிறார். இது அவரது பாடநூலாக்கநுட்பத்தையும் இலக்கணக் கல்வி எவ்வாறு புகட்டப்பட வேண்டும் என்பதில் அவருக்குள்ள கருத்தியலையும் தெளிவுறுத்துகிறது.

இலக்கணச் சுருக்கமும் இலக்கண வினாவிடை போலவே அதிகாரம் மற்றுமதன் உள்ளடக்கப் பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது. அதேவேளை விரிவும் ஆழமும் உடையதாக எழுதப்பட்டுள்ளது. எளிய வசனநடை இதன் முக்கிய அம்சமாகும். இந்நூலில் இலக்கண விதிகள் கூறப்பட்டு உதாரணங்களுடன் விளக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பகுதியினதும் நிறைவில் பரீட்சை வினாக்கள் அமைக் கப்பட்டுள்ளன. அக்காலச் சூழ்நிலைக்கேற்ப எவை தேவை, இன்றியமையாதவை என்பதை உணர்ந்தே இந்நூலாக்கங்கள் இடம்பெற்றுள்ளன. 406 அம்சங்களை உடைய இலக்கணச் சுருக்கம் மாணாக்கருக்கு இலக்கண, இலக்கியப் பயிற்சிகளை உண்டாக்கத்தக்க வகையில் வரைவிலக்கணங்களும் உதாரணங்களும் உடையதாக தனித்தன்மையோடு விளங்குகிறது. உதாரணமாக,

> "நெடிலோ டாய்த முயிர்வலி மெலியிடைத்
> தொடர்மொழி யிறுதி வன்மையூ ருகரம்
> அஃ்கும் பிறமேற் றொடரலும் பெறுமே"[7]

என நன்னூல் குற்றியலுகர சூத்திரம் மிக இறுக்கமாக அமைந்திருக்க இலக்கணச் சுருக்கத்தில் நாவலர் இதனை,

> "குற்றியலுகரமாவது, தனிக்குற்றெழுத்தல்லாத மற்றை எழுத்துக்களுக்குப் பின்னே மொழிகளினிறுதியில் வல்லின மெய்களில் ஏறிநிற்கும் உகரமாம்"[8]

எனக் கூறியிருப்பது மாணவர்க்கு இலகுவில் புரியத்தக்கதாயும் சொற்செட்டு மிகுந்ததாயும் அமைந்திருக்கிறது எனலாம்.

அதேவேளை காலத்தின் தேவைக்கேற்ப நாவலர் மரபு வழி இலக்கணத்தினின்றும் மாறுபட்டு 'பழையன கழிதலும் புதியன

புகுதலும் வழுவல காலவகையினாலே' எனச் சில புத்தாக்கங்களை இலக்கணச் சுருக்கத்தில் செய்துள்ளார். உதாரணமாக,

1. எழுத்ததிகாரத்தில் மொழிக்கு முதல் வரும் எழுத்துக்களில் ஙகரத்தைக் கூறாது விட்டமை.
2. இறுதிநிலை எழுத்துக்களில் எகர உயிரைக் கூறாது விட்டமை.
3. பதவியலில் வரும் பகுபதவியலில் வடமொழியாக்கத்தைக் கூறாது விட்டமை.
4. சொற்புணர்ச்சி விதிகளை வகைப்படுத்தி வரையறுத்து உரைத்தமை.
5. தமிழ் மரபில் நிறுத்தற்குறிகளை சரிவரப் பயன்படுத்தியமை

போன்றவற்றைக் குறிப்பிடலாம். மேலும் "வேற்றுமைப் புணர்ச்சியில் மகர வீற்றுச் சொற்களின் ஈறு கெட, வருமொழி வல்லெழுத்துமிகும்' எனத் தொல்காப்பியர் (எழுத்து சூ.310) கூற, நன்னூலார் இப்புணர்ச்சியை இருவகைப் புணர்ச்சிக்கும் பொதுவாகக் கூறுவார் (நன்.சூ 219). ஆனால் நாவலரோ இலக்கணச் சுருக்கத்தில்,

> "மகரத்தின் முன் வல்லினம் வரின், வேற்றுமையினும், அவ்வழியிலே பண்புத் தொகையினும், உவமைத் தொகையினும், இறுதி மகரங்கெட்டுவரும், வல்லினம் மிகும். எழுவாய்த் தொடரினும், உவமைத் தொகையினும் செய்யுமென்னும் பெயரெச்சத் தொடரினும், வினைமுற்றுத் தொடரினும், இடைச்சொற்றொடரினும், இறுதி மகரம் வரும் வல்லெழுத்திற்கு இனமாகத் திரியும்"

என்று வரையறுத்துக் கூறுகிறார்[9].

இவ்வாறு இலக்கணத்தை கோட்பாட்டியல் ரீதியில் முன்வைத்ததோடு பிரயோக ரீதியிலும் அதனை வெளிப்படுத்தினார்.

> '..... இவ்வகைப்பட்ட பெருஞ்சிறப்பினதாகிய அந்நூலானது பத்திய ரூபமாய் இருத்தலால் நிகண்டு கற்று இலக்கியவாராய்ச்சி செய்து இலக்கண நூல்களிலே பயின்ற வித்துவான்களுக்கேயன்றி மற்றவர்களுக்குச் சிறிதும் பயன்படாமையாலும், அவ்வித்து வான்களுக்கும் நோய் கவலை முதலிய ஏதுக்களால் விவேகங் கிளராக்காலத்துப் பயன்படாமையாலும் நிறைந்த கல்வியுடைய

> வித்துவான்களும் குறைந்த கல்வியுடைய பிறரும் ஆகிய யாவரும் எக்காலத்தும் எளிதில் வாசித்து உணரும் பொருட்டும் கல்வியில்லாத ஆடவர்களும் பெண்களும் பிறரைக் கொண்டு வாசிப்பித்து உணரும் பொருட்டும்... அதனைப் பெரும் பான்மையும் இயற்சொற்களும் சிறுபான்மை ஆவசிகமாகிய திரிசொற்கள் வடசொற்களும் பிரயோகிக்கப்படும் கத்தியரூபமாகச் செய்து வாசிப்பவர்களுக்கே எளிதில் பொருள் விளங்கும்படி பெரும்பான்மையும் சந்திவிகாரங்களின்றி, அச்சிற் பதிப்பித்தேன்.[10]

எனும் மேற்படி வரிகள் கவனத்துக்குரியவை. தன் இலக்கணக் கொள்கைக்கேற்ப நாவலர் உரைநடையை முதன்மைப்படுத்தியதோடு அதில் இயற்சொற்களை அதீதம் பயன்படுத்தினார்; சந்தி விகாரங்கள் அதிகம் அற்ற எளிதில் வாசித்தறியக் கூடிய வசனங்களை எழுதினார். அக்காலத்தில் எளிமையின் அடையாளமாக இவரது எழுத்துக்கள் அமைந்தன.

> ‘ஆறுமுகநாவலர் எல்லாருக்கும் எளிதில் விளங்கத்தக்க, பெரும்பாலும் இயற்சொற்களிலமைந்த, பெரிதும் சந்தி விகாரங்கள் அற்ற ஒரு புதிய உரைநடையை உருவாக்குவதில் பிரக்ஞைபூர்வமாக ஈடுபட்டார் என்பதும், எனினும், இது நாவலரின் சிறப்புப் பண்பு மட்டுமன்றி அன்றைய புதிய உரைநடை இயக்கத்தில் ஈடுபட்டவர்களின் பொதுப்பண்பாகவும் இருந்தது என்பதும் தெளிவாகின்றது’[11].

பிறரும் எளிய உரை நடையைக் கையாள முற்பட்டிருப்பினும் அதனைத் திறம்படச் செய்தவர் நாவலரே.\ அதனாற்றான் ‘உரைநடை கைவந்த வல்லாளராக’ இன்றும் வர்ணிக்கப்படுகிறார். இலக்கணத் தளத்திலே நின்றுகொண்டு தான் எழுதும் வடிவங்களுக்கு ஏற்ப (புராணம், உரை, கண்டனம், துண்டுப்பிரசுரம்...) மொழிநடையை மாற்றி அமைக்கும் பாங்கு கவனத்துக்குரியது. இலக்கணம் சார்ந்த நாவலரின் தனிச்சிறப்பம்சங்களாக,

1. இலக்கணத் தூய்மைவாதம்
2. மொழித்தூய்மைவாதம் பேசாமை
3. எளிமையான உரைநடை

என்பன கூறப்படுகின்றன. நாவலர் நவீன மொழியியல்வாதிகளால் இலக்கணத் தூய்மைவாதியாகவே அடையாளங்காணப்படுத்தப்படுகிறார். அதை நு..மான்

> 'நவீன உரைநடை முன்னோடிகளுள் முதல்வராக மதிக்கப்படும் ஆறுமுக நாவலரை நவீன தமிழில் இலக்கணத் தூய்மையை வலியுறுத்தியவர்களுள் முதல்வராகவும் நாம் கருதலாம். நவீன தமிழில் முக்கிய பண்பாகிய எளிமையை வலியுறுத்திய வரும் நாவலரே[12].

எனக் கூறுகின்றார். அதேவேளை அதே கட்டுரையின் பிறிதோரிடத்தில்

> 'தற்காலத் தமிழின் தூய பண்புகளுள் ஒன்று சந்தி பிரித்து எழுதுவதாகும். இதனை எளிமையாக்கத்தின் ஒரு அம்சமாக அண்ணாமலை (1980) விளக்குவார். சொற்புணர்ச்சியிலும் வாக்கிய அமைப்பிலும் எளிமையாக்கம் வெற்றி பெற்றிருப்பதை அவர் (1978) சுட்டிக்காட்டியுள்ளார். ஆயினும் இலக்கணத் தூய்மை வாதம் இதற்கு எதிர்நிலையில் செயற்படுவதையே காணமுடிகிறது. பாடநூல்களில் சொற்புணர்ச்சி அழுத்தி வலியுறுத்தப்படுகிறது'[13]

இவ்விரு கூற்றும் ஒப்பு நோக்கத்தக்கது. நாவலர் வழிவந்த இலக்கணத் தூய்மைவாதிகளே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டனர் என நு..மான் கூறுகிறார். நாவலர் இலக்கணத் தூய்மை, எளிமை, சந்திவிகாரம் அதிகமில்லாத வசனங்களை வற்புறுத்தியவர்; புணர்ச்சியையும் கைவிடாதவர். அம்மொழிநடை யாவரும் விளங்கத் தக்கதாய் இருந்தது. அதையேதான் நாவலர் வழிவந்தவர்களும் செய்தனர். ஆதலால் 'இலக்கணத்தூய்மை வாதம் எளிமைக்கு எதிர்நிலையாகச் செயற்படுவது' என நு..மான் கூறியிருப்பது முரண் நகையாக உள்ளது.

அந்நியர்கள் தமிழின் அழகை மொழிவளத்தை சிதைக்கும் எழுத்தை எழுதியபோது அதற்கு மாறாக இலக்கணத்தூய்மை வாதத்தை நாவலர் முன்வைத்தார். அது காலத்தின் தேவையாக இருந்தது. மொழியை மீட்டுருச் செய்தலும் நவீனமயமாக்கலுக்குட் படுத்தலுமானவை நாவலர் முன்னிருந்த பணிகள். மொழிச் சிதைவு இனக்குழுவின் அடையாளச் சிதைவுக்கு இட்டுச் சென்றுவிடும் எனக் கருதியதனாலேயே நாவலர் இலக்கணத்தூய்மைக்கு முதன்மை

யளித்தார். 1990களிலும் இதுவே நிகழ்ந்தது. பாரதி பேசுவது போல 'பேசுவது போல எழுதுவதே சிறந்தது' எனக் கூறியது அக்காலத்தில் பொருத்தப்பாடு உடையதாக இருந்திருப்பின் அக்காலத்தில் அது ஏன் செல்வாக்குப் பெறவில்லை; பாரதியின் கவிதை வீச்சுப் பெற்ற வெற்றியை அவரின் உரைநடைக் கொள்கை ஏன் பெறவில்லை? எனும் வினாவும் மேற்கிளம்புகிறது. இவ்வாறு இலக்கணத்தூய்மை வாதத்தின் மீது குற்றச்சாட்டுக்களை அடுக்கும் இம்மொழியியலாளர்கள் இற்றைவரை ஏன் தமது கட்டுரைகளை பேச்சுமொழிவழி கட்டமைக்காமல் இலக்கணத்தூய்மை வாதத்தின் வழியிலேயே முன்வைக்கின்றனர் என்பதும் எம்முன் உள்ள வினாவாகும். ஆக, காலத்தின் தேவையறிந்தே நாவலர் இலக்கணத்தூய்மை வாதத்தை முன்வைத்தார் என்பது தெளிவு[14]. 'இலக்கணத் தூய்மையை வரையறைப்படுத்தும் நு.்.மான்,

> 'இலக்கணத் தூய்மை என்பது மரபுவழி வந்த இலக்கணக் கொள்கையை வழுவாது கடைப்பிடித்தலையும், மொழி அமைப்பில் ஏற்படும் புதிய மாற்றங்களையும், புதிய வழக்காறுகளையும் நிராகரிப்பதையும் குறிக்கும். குறிப்பாகச் சொல்வதானால், எழுத்து வழக்கில் பேச்சு வழக்கின் செல்வாக்கை முற்றிலும் ஒதுக்குவதோடு பேச்சு வழக்கையும் எழுத்து வழக்கையொட்டி அமைத்துக்கொள்ள வலியுறுத்து வதைக் குறிக்கும்'[15]

எனக் கூறியுள்ளார். மொழி அமைப்பில் புதிய மாற்றங்களையும் புதிய வழக்காறுகளையும் நிராகரிப்பதைக் குறிக்கும் எனக் கூறியுள்ளமை நாவலருக்குப் பொருந்தாது; இதற்கு உதாரணங்களாக

1. ஆங்கில வழி நின்று நிறுத்தற் குறிப்பயன்பாட்டை சரிவரப் பயன்படுத்தியவர்

2. சந்தி பிரித்தெழுதியவர்

3. எல்லோரும் விளங்கத்தக்க இயற்சொற்களை அதிகம் பயன்படுத்துமாறு கூறியும் பிரயோகித்தும் நின்றார். (இன்றைய மொழியியலாளர்களுக்கு அவை திரி சொற்களாக விளங்காத சொற்களாக இருக்கக்கூடும்)

4. பந்தியமைப்பை வற்புறுத்தியவர்

5. மொழித்தூய்மைவாதம் பேசாது திசைச் சொற்கள், வடசொற்களைப் பயன்படுத்தியவர்

என்பனவற்றைக் குறிப்பிடலாம். இலக்கண நூற்பயன்பாட்டில் ஆரம்ப நிலையினர்க்கு ஏற்ப இலக்கண வினாவிடையையும் பின்னையர்க்கு இலக்கணச் சுருக்கத்தையும் உயர் கல்வியாளர்க்கு நன்னூற் காண்டிகையுரையையும், தொல்காப்பியப் பதிப்பையும் தந்தமை அவரது கல்விக் கொள்கையின் வெளிப்பாடு அதற்கேற்ற பாடத்திட்டப் பகுப்பு இதனூடான மொழியறிவு விருத்தி என்பவற்றை ஏற்படுத்தினார். அதேவேளை நாவலர்,

> 'தமிழ் கற்பிக்கும் சைவசமயிகள் முன்னர் பாலபாடங்களைப் படித்துக்கொண்டு, இலக்கணச் சுருக்கத்தைக் கற்றறிந்து, இயன்ற அளவு பிழையில்லாமல் எழுதவும் பேசவும் பழகுக'[16]

என உரைத்துள்ளார். நாவலரின்

> 'பாலபாடங்கள், தமிழரினதும் சைவரதும் பழக்க வழக்கம், ஒழுக்கம், கொள்கை என்பவற்றை உடையதாக இருப்பதோடு தமிழ் மொழிப்பயிற்சிக்குச் சிறப்பாகப் பயன்படுகிறது. முதலாம் பாலபாடம் சொற்கூட்டங்கள் பிற்காலத்தில் நாம் பிழைவிடும் சொற்களின் சரியான உருவங்களாக இருக்கும்'[17]

என்ற கூற்றால் இதனை உணரலாம்.

ஆக நாவலர் தன் இலக்கணச் செயற்பாட்டில் மரபினை மீட்டுருச் செய்தும் மரபுவழி நின்று புதியன புகுத்தியும் புதுவது புரிந்தார் என்பது தெளிவாகிறது. தமிழும் அதன்வழி இலக்கியங்களும் தொன்மங்களை இழக்காது நீடித்த வாழ்வைப் பெறவும் மொழிச்சிதைவு ஏற்படாமலும் நவீன எழுத்துக்கள் சீரான பாதையிற் செல்லவும் நீடிக்கவும் தக்கவகையில் தன் இலக்கணக் கொள்கையை வகுத்தார். சிதறுண்ட அக்கால சமூகத்துக்கு மொழி சார்ந்த செம்பாதையைக் காட்டிய திசைமானியாக அவர் திகழ்கின்றார். நாவலர் தனது காலத்திற்கேற்றவை எவை என்பதையும் இன்றியமையாதன எவை என்பதையும் சிந்தித்தே செயற்பட்டார் என்பதை மொழியிலாய்வாளர்கள் புரிந்து கொள்வார்களாக.

## அடிக்குறிப்புகள்

1. கைலாசபிள்ளை.த., 1954, ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு, பாகம் 1, ப.44
2. மேற்படி., ப.65
3. கலையரசி சின்னையா., 1979, 'நாவலரது இலக்கண முயற்சிகள்', நாவலர் நூற்றாண்டு மலர், ப.270
4. மேற்படி., ப.271
5. பூலோகசிங்கம், பொன்., 2002, தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெருமுயற்சிகள். குமரன் புத்தக இல்லம், ப.42
6. வேங்கடசாமி.மயிலை.சீனி., பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம்
7. ஆறுமுகநாவலர், 1954, நன்னூற் காண்டிகையுரை, வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை, பா.94
8. ஆறுமுகநாவலர், 1957, இலக்கணச் சுருக்கம் வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை, எழுத்து, 22
9. வேலாயுதபிள்ளை,செ., 1969, 'நாவலரது இலக்கணப்பணி', நாவலர் மாநாட்டு மலர், நாவலர் நற்பணி மன்றம், இலங்கை, பக்.79,80
10. ஆறுமுக நாவலர், 1950, திருத்தொண்டர் பெரியபுராண வசனம், வித்தியானுபால அச்சகம், சென்னை, ப.03
11. நு.மான்.எம்.ஏ., 2006, மொழியும் இலக்கியமும், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், ப. 56
12. மேற்படி, ப.157
13. மேற்படி, ப.153
14. செல்வமனோகரன்,தி., 2016, நாவலரின் தொலைநோக்கு மொழி, 'நாவலரின் தொலை நோக்கு, யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம், பக்.41 -54
15. நு.மான்.எம்.ஏ., 2006, மேற்படி, ப.56
16. தண்டபாணிதேசிகர்.ச., 1961, நன்னூல் விருத்தியுரை, ஆதீனப் பதிப்பு, முகவுரை, ப.8
17. பூலோகசிங்கம்., மேற்படி நூல், ப.42

## உசாத்துணை நூல்கள்


1. ஆறுமுகநாவலர், 1954, நன்னூற் காண்டிகையுரை, வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை,

2. ஆறுமுகநாவலர், 1957, இலக்கணச் சுருக்கம், வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை,

3. ஆறுமுக நாவலர், 1950, திருத்தொண்டர் பெரியபுராண வசனம், வித்தியானுபால அச்சகம், சென்னை.

4. கைலாசபதி.க., (பதி) 1979, நாவலர் நூற்றாண்டு மலர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, யாழ்ப்பாணம்.

5. கைலாசபிள்ளை.த., 1954, ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு, பாகம் 1, வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை.

6. சண்முகம்.செ.வை., 2012, இலக்கண உருவாக்கம், அடையாளம், திருச்சி.

7. பூலோகசிங்கம், பொன்., 2002, தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெருமுயற்சிகள். குமரன் புத்தக இல்லம்.

8 .தண்டபாணிதேசிகர்.ச., 1961, நன்னூல் விருத்தியுரை, ஆதீனப் பதிப்பு, முகவுரை.

9. நுட்மான்.எம்.ஏ., 2006, மொழியும் இலக்கியமும், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்.

10. மனோன்மணி சண்முகதாஸ்., 2016, ,'நாவலரின் தொலை நோக்கு', யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம், இலங்கை.

11. நாவலர் மாநாட்டு விழா மலர், 2013, நாவலர் நற்பணி மன்றம், இலங்கை.

12. 4ஆவது உலகத் தமிழாய்ச்சி மாநாட்டு நினைவு மலர், 1974, அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றம், இலங்கை.